**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 76/2024**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 09.10.2025

**1,2 எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டனர்,5,6 எதிரிகள் ஆஜரில்லை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . மற்ற எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது உடையாளிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் புதுக்கோட்டை மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 17.12.2023 ம் மாலை 17.30 மணிக்கு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் உத்தரவின் படி போதைபொருள் தடுப்பு நடவடிக்கை சம்மந்தமாக உதவி ஆய்வாளர் தலைமை காவலர் பாலமுருகன், நானும் டவுன் பகுதியில் ரோந்தில் இருந்த போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி புதுக்கோட்டை டவுன் அடப்பன்வயல் சிங்கமுத்து அய்யனார் கோவில் அருகில் வாகன சோதனை செய்த போது இரகசிய தகவலாளி சொன்னபடி வந்த ஆட்டோ வை தடுத்து நிறுத்தி விசாரணை செய்த போது ஆட்டோ பதிவு எண் TH 55 BH 7284 TVS king மஞ்சள் நிற ஆட்டோ ஓட்டி வந்த ஓட்டுநர் சண்முகத்தை விசாரணை செய்த போது அவர் முன்னுக்கு பின்னாக பதில் அளித்தார். ஆட்டோவில் என்ன இருக்கிறது என்று கேட்டதற்கு துணி மணிகள் இருப்பதாக சொன்னார் ஆட்டோவை சோதனை செய்த போது ஆட்டோவில் வெள்ளை நிற 3 சாக்குமூட்டைகள் இருந்தது. அதை சோதனை இட வேண்டும் என்று கேட்ட போது அப்போது அந்த வழியாக வந்த புதுக்கோட்டையை சேர்ந்த

கோபால் மற்றொரு நபர் மணிகண்டன் ஆகியோர்களை உதவி ஆய்வாளர் இந்த ஆட்டோவை சோதனை செய்ய நீங்கள் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார். அதற்கு புதுக்கோட்டையை சேர்ந்த கோபால் மற்றொரு நபர் மணிகண்டன் நாங்கள் சாட்சியாக இருக்கிறோம் என்று கூறினார்கள். சாட்சிகள் முன்னிலையில் ஓட்டுநர் சண்முகத்தை வெள்ளை நிற சாக்குமூட்டைகளை பிரித்து காட்ட சொன்னபோது பிரித்து காட்ட மூட்டையில் காக்கி நிற டேப் ஒட்டிய கஞ்சா பொட்டலங்கள் இருந்தது. உதவி ஆய்வாளர் குற்ற காரணம் கூறி மேற்படி சண்முகத்தை 17.45 மணிக்கு கைது செய்தார். மேற்படி தலைமை காவலர் சரணவனனுக்கு தகவல் சொல்லி மடிக்கணினி மற்றும் தாரசு எடுத்து வரும்படி சொன்னதன் பெயரில் அவர் எடுத்து வந்தார் பிறகு 18.00 மணிக்கு சண்முகம் தானாக முன்வந்து சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.18.45 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் நாங்கள் ஏற்கனவே எடுத்து சென்ற தரைவிரிப்பில் கஞ்சாவை கொட்டி எடை வைத்து பார்த்த போது ஒவ்வொரு மூட்டையிலும் தலா 20 கிலோ வீதம் 3 மூட்டைகளிலும் 60 கிலோ இருந்தது.அதில் மாதிரிக்காக தலா 50 கிராம் மாதிரி பகுப்பாய்விற்கு பாலீதின் கவரில் எடுத்து காக்கி கவரில் வைத்து SHO சீல் வைத்து சாம்பில் எடுக்கப்பட்டது. பிறகு மீதம் இருந்த கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்குபையில் 20 கிலோ வீதம் 2 சாக்குகளிலும் ஒரு சாக்கில் 19.900 கி.கி வைத்து SHO சீல் வைக்கப்பட்டது. பிறகு சண்முகத்திடம் இருந்து 20 கிலோ வீதம் 2 கஞ்சா மூட்டையும் 19.900 கி.கி உள்ள ஒரு கஞ்சா மூட்டையும் அவர் கஞ்சா எடுத்துபோகக்கூடிய ஆட்டோ பதிவு எண் TH 55 BH 7284 TVS king மஞ்சள் நிற ஆட்டோவையும் அவர் வைத்திருந்த VIVO cell phone யை சார்பு ஆய்வாளர் பாலாஜி சாட்சிகள் கோபால் மற்றும் மணிகண்டன் முன்னிலையில் அத்தாட்சி கைப்பற்றினார்.பிறகு சண்முகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அங்கிருந்து புறப்பட்டு 20.15 மணிக்கு பெரியார் நகர் சென்று அவர் காட்டிய சிவகங்கையை சேர்ந்த சேவுகமூர்த்தியை அடையாளம் காட்டினார். சேவுகமூர்த்தியை விசாரித்த போது அவர் கஞ்சா வைத்திருப்பதை ஒப்புக்கொண்டு சேவுகமூர்த்தியே இரண்டு மூட்டை கஞ்சா எடுத்து வந்து கொடுத்தார்.அதை சாட்சிகள் கோபால் ,மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அந்த மூட்டையை பிரித்து பார்த்த போது அதில் கஞ்சா இருந்தது. பிறகு சேவுகமூர்த்தியை உதவி ஆய்வாளர் குற்ற காரணம் கூறி சேவுகமூர்த்தியை 20.45 மணிக்கு கைது செய்தார். பிறகு அதே 20.45 மணிக்கு உதவி ஆய்வாளர் மற்றும் சாட்சிகள் கோபால் ,மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்தார்.அதில் சாட்சிகள் கோபால் ,மணிகண்டன் கையொப்பம் செய்தார்கள். 21.30 மணிக்கு கோபால் ,மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் 2 வெள்ளை நிற மூட்டைகளில் இருந்த கஞ்சாவை நாங்கள் ஏற்கனவே எடுத்து சென்ற மின்னனு தராசில் அந்த மூட்டைகளை எடை வைத்து பார்த்தோம் அந்த ஒவ்வொரு மூட்டைகளும் தலா 20 கிலோ வீதம் இருந்தது அந்த 2 மூட்டைகளையும் open செய்து தரைவிரிப்பில் கொட்டி மூட்டைகளில் இருந்த கஞ்சாவை மொத்தமாக கொட்டி கலந்து அதில் பகுப்பாய்விற்கு என காக்கி நிற கவர்களில் சார்பு ஆய்வாளர் தலா 50 கிராம் வீதம் 2 மாதிரிகள் எடுத்தார்அந்த மாதிரிகளுக்கு எடுத்தது போக மீதம் இருந்த கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்குபையை பயன்படுத்தி ஒரு சாக்குபையில் 20 கிலோ கஞ்சவை நிரப்பியும் மற்றொரு சாக்குபையில் 19.900 கி.கி கஞ்சா வை நிரப்பியும் இரண்டு சாக்கு மூட்டையின் வாய் பகுதியை நூலால் கட்டி SHO சீல் வைக்கப்பட்டது. மாதிரிக்கு எடுக்கப்பட்ட கஞ்சாவை அந்த இரண்டு காக்கி நிற கவர்களிலும் SHO சீல் வைக்கப்பட்டது. பிறகு அவர் வைத்திருந்த இரு சக்கர வாகனம் பதிவு எண் TN 55 BH 9993 Bajaj CD100 என்ற வாகனத்தையும் அவர் வைத்திருந்த VIVO ஆண்டாய்டு போன் மற்றும் அவர் வைத்திருந்த ரூ10,000/- ரூபாயையும் உதவி ஆய்வாளர் சாட்சிகள் கோபால் மற்றும் மணிகண்டன் முன்னிலையில் கைப்பற்றினார். பிறகு எதிரியுடன் புறப்பட்டு சாட்சிகள் கோபால் மற்றும் மணிகண்டன் அழைத்துசென்று விஜயபுரம் ஆரஸ்பதி காட்டில் 22.45 மணிக்கு சேவுகமூர்த்தி மறைத்து வைத்திருந்த TN 63 BK 9049 TATA AC நான்கு சக்கர வாகனத்தை சாட்சிகள் கோபால் மற்றும் மணிகண்டன் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு புதுக்கோட்டை மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையத்திற்கு 23.45 மணிக்கு எதிரிகள் மற்றும் வழக்கின் சொத்துக்களுடன் காவல் நிலையம் ஆஜராகி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன் நானும் தலைமை காவலர் பாலமுருகன் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:-**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.